*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p116-128** | Available online at: www.ngmtamil.in
*Original Research Paper*

# ஆத்தங்கரை ஓரம் நாவலில் பழங்குடியினரின் பண்பாடு

## The culture of the tribal people in the novel 'Aathankarai Oram

**முனைவர் மு. நாகராஜன்,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி, வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி-மாவட்டம்-627003, தமிழ்நாடு. இந்தியா. – 627003

**Dr.M.Nagarajan*,**
*Assistant Professor, Department of Tamil, Francis Xavier Engineering College,*
*Vannarpettai, Tirunelveli, Tamil Nadu, India– 627003*
*Email: nagarajan1481@gmail.com, Phone/Mobile +919626331257*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 29-07-2026
**Published: 01-08-2026**

*Corresponding Author
Email: *:*
*nagarajan1481@gmail.com*
Tel: *+919626331257*

**Abstract:** The novel 'Aathankarai Oram' written by Ve. Iraiyanbu is centered on the cultural identity and life struggles of the tribal people living in the Sindhur region. It describes how these indigenous people, forced to leave their ancestral land due to dam construction, staged various forms of protest against the government, only to find themselves in a situation where these protests bore no fruit. This article examines the cultural elements of the tribal people, including their food habits, hospitality, love of nature, attachment to the land, modes of worship, traditional occupational knowledge, ability to predict climate change, marriage rituals, faith in education, and qualities of leadership. This study establishes that the novel realistically portrays the cultural change and loss experienced by indigenous people who live in harmony with nature when they are relocated to an alternative place. Through characters such as Simon and Radha Padengar, the leadership qualities of the tribal people and their attachment to the land are brought out. Ultimately, the main aim of this study is to raise social awareness regarding the cultural preservation of indigenous/tribal peoples.

**Keywords:** *Tribal people, culture, ve. Iraiyanbu, displacement, hospitality, attachment to land, worship, traditional occupation, climate, ritual, protest, rehabilitation.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.12**

**ஆய்வுச்சுருக்கம்**

வெ.இறையன்பு எழுதிய 'ஆத்தங்கரை ஓரம்' நாவல் சிந்தூர் பகுதியில் வாழும் பழங்குடியின மக்களின் பண்பாட்டு அடையாளங்களையும் வாழ்வியல் போராட்டங்களையும் மையமாகக் கொண்டு படைக்கப்பட்டதாகும். அணைக்கட்டுமானத்தால் தங்கள் பூர்வீக நிலத்தை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் பழங்குடியின மக்கள் அரசுக்கு எதிராகப் பல்வேறு வழிகளில் போராட்டங்கள் நடத்தியும் அவை பலனளிக்காத சூழலை இந்நாவல் விவரிக்கிறது. இக்கட்டுரை, பழங்குடியின மக்களின் உணவுப் பழக்கம், விருந்தோம்பல், இயற்கை நேசம், மண் சார்ந்த பற்று, வழிபாட்டு முறைகள், பாரம்பரிய தொழில் அறிவு, பருவநிலை மாற்றத்தை கணிக்கும் திறன், திருமணச் சடங்கு, கல்வி மீதான நம்பிக்கை, தலைமைத்துவப் பண்பு ஆகிய பண்பாட்டுக் கூறுகளை ஆராய்கிறது. இயற்கையோடு இணைந்து வாழும் பழங்குடியின மக்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும் போது ஏற்படும் பண்பாட்டு மாற்றத்தையும் இழப்பையும் இந்நாவல் யதார்த்தமான முறையில் சித்திரிக்கிறது என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது. சிமன், ராதா படேங்கர் போன்ற கதாபாத்திரங்கள் வழியே பழங்குடியின மக்களின் தலைமைத்துவப் பண்பும் மண் மீதான பற்றும் வெளிப்படுத்தப்படுகின்றன. இறுதியில், பழங்குடியின மக்களின் பண்பாட்டுப் பாதுகாப்பு தொடர்பான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாக அமைகிறது.

**கருச்சொற்கள்**

பழங்குடியினர், பண்பாடு, இடப்பெயர்வு, விருந்தோம்பல், மண் சார்ந்த பற்று, வழிபாடு, பாரம்பரிய தொழில், பருவநிலை, சடங்கு, போராட்டம், மறுவாழ்வு.

**முன்னுரை**

தமிழ் இலக்கியப் பரப்பில் நாவல் இலக்கியம் சமூக யதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் சிறந்த வடிவமாகத் திகழ்கிறது. குறிப்பாக, சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கை நெருக்கடிகளையும் பண்பாட்டு அடையாளங்களையும் பதிவு செய்யும் நாவல்கள் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இவ்வகையில் வெ. இறையன்பு எழுதிய 'ஆத்தங்கரை ஓரம்' நாவல் சிந்தூர் பகுதியில் வாழும் பழங்குடியின மக்களின் வாழ்வியல் போராட்டங்களையும் அணைக்கட்டுமானத்தால் அவர்கள் எதிர்கொள்ளும் இடப்பெயர்வு நெருக்கடிகளையும் மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது.

இந்நாவல் பழங்குடியின மக்களின் இயற்கை நேசம், விருந்தோம்பல் பண்பு, மண் சார்ந்த பற்று, வழிபாட்டு முறைகள், பாரம்பரிய தொழில் அறிவு, பருவநிலை மாற்றத்தைக் கணிக்கும் இயற்கை அறிவு, திருமணச் சடங்குகள், கல்வி மீதான நம்பிக்கை, தலைமைத்துவப் பண்பு போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை விரிவாக எடுத்துரைக்கிறது.அதேபோன்று, அரசு அணைத் திட்டத்தை நிறைவேற்றும் பொழுது பழங்குடியின மக்களின் உரிமைகளையும் பண்பாட்டு

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.12**

அடையாளங்களையும் புறக்கணிக்கும் போக்கையும், அதற்கெதிராக மக்கள் நடத்தும் போராட்டங்களையும் ஆசிரியர் யதார்த்தமான முறையில் சித்திரிக்கிறார்.

இவ்வாய்வுக் கட்டுரையானது, 'ஆற்றங்கரை ஓரம்' நாவலில் இடம்பெறும் பழங்குடியின மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும், அவர்கள் இயற்கையோடு கொண்டுள்ள நெருங்கிய உறவையும், அணைக்கட்டுமானத்தால் ஏற்படும் பண்பாட்டு மாற்றத்தையும் இழப்பையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், பழங்குடியின மக்களின் வாழ்வியல் சிக்கல்களை இலக்கியம் வழியாக அறியவும், அவர்களது பண்பாட்டுப் பாதுகாப்பு குறித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**பண்பாடு**

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் மனித செயற்பாட்டு முறைகளையும், அச்செயற்பாடுகளுக்குச் சிறப்புத்தன்மையும் முக்கியத்துவமும் அளிக்கும் குறியீட்டு அமைப்புகளையும் உள்ளடக்கியதாகும். இது ஒரு குழுவின் வாழ்வியல் அடையாளத்தையும், அறிவு மரபையும், பழக்கவழக்கங்களையும் பிரதிபலிக்கிறது.

"மரபுவழி சார்ந்த விவரங்களைத் தன் முன்னோர் வழியொற்றி கொண்டு போவதுதான் பண்பாடாகும். மனிதன் தேடல் திறன் செயல் வடிவம் பெற்ற நிலையே பண்பாடு"1 (பக்தவச்சல பாரதி, 1990). S\"மானிடவியல் அறிஞர்களான ஆல்பிரெட் குரோபெர் மற்றும் கிளைட் குளுக்ஹோன் ஆகியோர் தங்கள் நூலில்" (Alfred Kroeber, Clyde Kluckhohn,1952) பண்பாடு பற்றி அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட இருநூற்றுக்கும் மேற்பட்ட வரையறைகளைப் பட்டியலிட்டுள்ளனர். இது பண்பாடு என்பது ஒரு நிலையான வரையறைக்குள் அடங்காத, பன்முக அர்த்தங்களைக் கொண்ட கருத்தாக்கம் என்பதை உணர்த்துகிறது.

**பழங்குடியினர் பண்பாடு**

பொதுவான பண்பாட்டு வரையறையிலிருந்து வேறுபட்டு, பழங்குடியின பண்பாடு என்பது இயற்கையோடு நேரடித் தொடர்பில் வாழும் ஒரு குழுவின் வாழ்வியல் அறிவு, வழிமொழி மரபுகள், மண் சார்ந்த ஆன்மிக நம்பிக்கைகள், கூட்டு உழைப்பு முறைகள், தலைமைத்துவ அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைகிறது. இது 'ஆத்தங்கரை ஓரம்' நாவல் இடப்பெயர்வு காரணமாக இழைக்கப்படும் பண்பாட்டு அடையாளத்தை ஆய்வு செய்வதற்கான கோட்பாடு அடிப்படையாக அமைகிறது.

**பழங்குடியினரின் இருப்பிடம்**

உலகில் தோன்றிய முதல் இனம் தமிழினம் என்பது உலகறிந்த உண்மை."கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி!" என்னும் வரிகளுக்கு ஏற்ப தமிழின மக்களின் தொப்புள்கொடி உறவாகத்தான் உலகியுள்ள மக்கள் அனைவரும் தோன்றினர் என்பதை இன்று ஆராய்ச்சியாளர்கள் நிறுவியுள்ளனர்.

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.12**

பழங்குடியினர் வாழும் இடமாகிய மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சி. இது மக்கள் தோன்றிய இடம் என்பது நிரூபணம் ஆகிறது. இக்கூற்றின் அடிப்படையில் பழங்குடியின மக்களே மனித இனத்தின் முதல்வர்கள். மக்கள் ஓரிடத்தில் ஒன்றுபட்டு வாழும் இடம் சமுதாயம் என்றழைக்கப்படுகிறது. "மனிதர்களுக்குப் பலவகைப் பொருள்களும் பிறர்தம் உதவிகளும் தேவைப்படும் போது ஓரிடத்தில் கூட்டாளியாக இணைகின்றனர். இதனையே சமுதாயம் என்று கூறலாம்." (சாமிநாத சர்மா, 1978) என்னும் கூற்று இங்கு ஒப்பு நோக்கதக்கதாகும்.

இவர்கள் வாழும் இடத்தில் தங்களுக்குத் தேவையான உணவாகிய தேன், கிழங்கு, சாமை, கம்பு, ராகி, வெண்டைக்காய், வெள்ளரிக்காய் முதலானவற்றை பயிர் செய்து மலையிலேயே தங்கி வாழ்ந்து வந்தனர். இம்மக்கள் இடம் சார்ந்த தகவமைப்புகளைக் கொண்டு இயற்கையோடு இணைந்து இயற்கை சார்ந்த பல்லுயிர்களின் உறவோடும் வாழ்ந்து வருகின்றனர். இதனை, "அந்தப் பகுதியில் இருந்த மரங்களும், செடிகளும், பூக்களும் அழகழகான பறவைகளும் மூழ்கப் போகிறதை என்னாலகற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியலயூதிகா. இவ்வளவு அழகான இயற்கையைச் சிதைச்சி வருங்கால சந்ததிக்கு நாம்ப எவ்வளவு துரோகம் பண்ணறோம் தெரியுமா?" (ஆ.ஓ, ப.65), "சலசலத்து ஓடும் அந்த நதியின் ஓசையே சங்கீத ஒலியாய் செவிகளில்" (மேலது, ப.17) என்னும் வரிகள் எடுத்துரைக்கிறது. இவ்வாறு இயற்கையோடு இயைந்து வாழும் பழங்குடியின மக்கள் வேறிடம் சென்று வாழ முடியாது எனக் கூறும் நிலைப்பாட்டை அறிய முடிகிறது.

**பழங்குடியினரின் உணவு பழக்கம்**

மனிதனின் அடிப்படைத் தேவை உணவு, உடை, இருப்பிடம் முக்கியமானவை. இதன் அடிப்படையில் முதன்மையான உணவு முதலிடத்தைப் பெற்றுள்ளது. இது பழங்காலம் தொட்டு அந்தந்த நிலத்து மக்களின் உணவு முறைகள் மாற்றம் பெற்றுள்ளதை அறியலாம்.

மக்கள் ஐவகை நில அடிப்படையிலும் நிலவும் சூழல் அடிப்படையிலும் உணவை உட்கொண்டனர். இப்பழங்குடியின மக்கள் தங்கள் நிலத்தில் விளைவித்த பொருள்களையே உணவாகக் கொ ண்டனர்.இதனை, "கம்பை அரைத்துப் பண்ணிய கூழில் தயிரை வழிய விட்டுக் கரைத்து; வீட்டுக்கு முன்னால் நீளம் நீளமாய்க் காய்த்திருக்கிற சிவப்புப் படிந்த வெண்டைக்காயைச் சுட்டுப் பண்ணிய கறியை ஒரு தட்டில் வைத்து சிமனுக்கு முன் இருத்தினார்." (மேலது, பக்.15-16). இப்பழங்குடியின மக்கள் தங்களுக்குத் தேவையான உணவு முறையினை கொண்டு வாழ்ந்தார்கள் என்பதை அறியமுடிகிறது.

**விருந்தோம்பல்**

உலக மக்களின் பண்பாட்டில் என்றும் தனித்துவமாய் போற்றப்படும் பண்புகளில் முதன்மையான பண்பு அறம். அந்த அறத்தில் சிறந்தது விருந்தோம்பல். இதனைத் தமிழர்கள் தங்கள் முதல் கடமையாகப் போற்றிக் கடைப்பிடித்து வந்துள்ளனர். இதுவே தமிழர்களுக்கு உரிய அடையாளத்தைக் காட்டும் பண்பாக விளங்கி வருகிறது.

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.12**

நாவலில் இடம்பெற்றுள்ள பழங்குடி மக்களிடமும் இப்பண்பு மிகுந்து காணப்படுவதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இதனை, "நதியின் முகப்பில் இருக்கின்ற சிந்தூர் கிராமத்திற்கு அந்த ஊர் பெரியவர்கள் எல்லாம் வந்து சேர்ந்திருந்தார்கள். எல்லா உபசரிப்பையும் ஏற்றுக் கொண்டு கூடை கூடையாய் அவர்கள் பறித்துத் வந்த பிஞ்சு வெள்ளரிக்காய்களைப் படகுத்துறைக்குக் கொண்டு போக சொல்லி விட்டு எல்லோரையும் குனிந்து குனிந்து மரியாதை செய்து கொண்டிருந்தனர்." (மேலது, ப.5). அரசு அதிகாரிகளாக வந்த அணைக்கட்டும் அதிகாரிகள் தங்கள் நிலங்களை அரசுக்கு எடுத்துத் தரப் போகிறார்கள் எனத் தெரிந்திருந்தும் கூட அவர்களை அன்போடு உபசரிக்கும் விருந்தோம்பல் பண்பு பழங்குடியின மக்களிடம் மிகுந்து இருப்பதை படைப்பாசிரியர் பதிவு செய்துள்ளமை அறிய முடிகிறது.

படைப்பிலக்கத்தைப் பொறுத்தவரையில் "செய்திகளைப் பதிவு செய்வதிலும் அவற்றைப் வாசகர்களிடம் கொண்டு சொல்வதிலும் நாவல் மகத்தான சமூகப் பணி ஆற்றியுள்ளது. சமூகத்தின் அடிப்படை இயல்புகளைக் கலையுணர்வுடன் காட்டுவதன் மூலமே இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டுகிறது." (சாமிநாத சர்மா, 1978). இக்கூற்றின் அடிப்படையில், சமுதாய உணர்வோடு சமூகத்திலும், அரசியலிலும் தோன்றும் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு சிறந்த புதினமாகப் படைக்க முடியும் என்ற நோக்கில் 'ஆத்தங்கரை ஓரம்' புதின ஆசிரியர் பழங்குடி இன மக்களின் சமூகச் சிக்கல்களைச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டியுள்ளார்.

**இயற்கையை நேசித்தல்**

சிந்தூர் பழங்குடியின மக்களின் இருப்பிடம் மலைப்பகுதி. அங்கே, பறவைகளின் கீச் குரல்களும், சலசலத்து ஓடும் ஆறுகளும் கண்ணாடியாய் மின்னும் நீரோடைகளையும் பாதுகாத்து வருங்கால சந்ததியினருக்கு அளிக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தோடு அணைக்கட்ட பழங்குடியின மக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராடி வருகின்றனர். அணை கட்டுவதால் பூர்வீகமாகத் தோன்றி வளர்ந்த இயற்கை கொடைகள் அழிந்து போகும். தங்களின் பழக்கவழக்கத் தன்மை பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகும் என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

நாவல்கள் "அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிப்பதுடன் நாளும் வாழும் குணச்சித்திரங்களைக் கதைமாந்தர்களாக நமக்குக் கொண்டு வந்து நிறுத்துகின்றன." (த.ராசு, 1989) இக்கூற்று இப்புதினத்திற்கு ஏற்புடையதாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. புதின ஆசிரியர் கதைமாந்தர்களின் வழியே பலவிதமான காட்சிகளையும் கருத்துக்களையும் நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார். இதனை, "லட்சத்து அறுபதாயிரம் ஹெக்டேர் வனப்பகுதி இந்த அணையினால் மூழ்க விருக்கிறது. இப்படிப்பட்ட அழகிய வனத்தை மனிதர்களால் உருவாக்க முடியுமா? காகித மலர்களுக்கும் நிஜமலர்களின் இயற்கை தன்மை இருக்க முடியுமா?" (ஆ.ஓ., பக்.89-90) இவ்வாறு ஆசிரியர் சுதிர் என்னும் கதாபாத்திரத்தின் மூலம் இயற்கையின் மீதான பற்றும் இயற்கை கொடைகளை நேசிக்கும் பண்பும் இயற்கையைப் பாதுகாக்கும் எண்ணத்தையும் பதிவு செய்துள்ளமையை அறிய முடிகிறது.

இதனை, "பனி படர்ந்த காலைப் பொழுதில் கிழே விழுந்திருந்த பன்னீர்புஷ்பங்கள் கடைசி மூச்சை பெருமூச்சாய் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன". (ப.17) என்னும் கூற்று மெய்ப்பிக்கிறது. நாவலில் வரும் சிமன் இயற்கையைக் கூர்ந்து நோக்கும் அறிவும் திறமையும் கொண்டவர். அவரது இயற்கையின் மீதான பற்றினை ஆசிரியர் இப்பாத்திரத்தின் மூலம் பதிவு செய்துள்ளமை விதந்தோத தக்கதாகும்.

**மண் சார்ந்த பற்று**

பழங்குடியின மக்களின் மண் மீது கொண்ட பற்றினை நாவல் சிறப்பிக்கிறது. அணைக்கட்டு வேலை ஆரம்பித்தபோது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக தாம் வாழ்ந்த ஊரை விட்டு பலரும் வெளியேறி தப்பித்தபோது ஒருவர் மட்டும் மண் மீது பற்று கொண்டவராய் அங்கேயே தங்கி விடுகிறார். "கோவிந்த் பாயினுடைய குடிசை தண்ணீரில் இடிந்து மிதந்து செல்வதை கண்ணுற முடிந்தது. என்னை வேண்டுமானால் இந்த தண்ணீர் மூழ்கடிக்கட்டும் நான் எங்கும் போக மாட்டேன் என்று அவர் சொல்வது நடந்து விட்டது. கோவிந்த பாயி ஆற்றோடு போய்விட்டார்" (மேலது,.,ப.189)

. என்று நாவலாசிரியர் பழங்குடி மக்களின் மண் பற்றை கோவிந்த பாய் என்னும் கதாபாத்திரம் வழியாக எடுத்துரைக்கிறார். "முழுமைப் பாத்திரங்கள் கதையின் தொடக்கத்தில் பாத்திரம் அறிமுகமாகும் நிலையிலிருந்து கதையில் முழுமையாக ஏதேனும் ஒரு வகையில் வளர்ச்சி அல்லது மாற்றம் ஏற்பட்டால் அதை முழுமையாகக் கருதுவர்." (ராசு, 1989). எனவே புதினம் சிறப்புற அன்புள்ளம், நேர்மை, நற்குணம் கொண்ட பாத்திரமாகப் படைக்கின்றனர்.

ஒவ்வொரு நாவலிலும் தொடக்கம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி என்ற கண்ணோட்டத்தில் படைப்பாளர்கள் பாத்திரங்களைப் படைக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது. "அந்தப் பகுதியில் இருந்த மரங்களும் செடிகளும் பூக்களும் அழகான பறவைகளும் மூழ்கப் போவதை என்னால கற்பனை பண்ணி கூட பார்க்க முடியாதுல. யூதிகா. இவ்வளவு அழகான இயற்கையைச் சிதைச்சு வருங்கால சந்தையினருக்கு நம்மை எவ்வளவு துரோகம் பண்ணுகிறோம் தெரியுமா" (ஆ.ஓ, ப.65). என்னும் கூற்று மூலம் படைப்பாசிரியர் யூதிகா என்ற கதாபாத்திரத்தின் மூலம் பழங்குடியினர் இயற்கைக் கொடையாகிய மரம், செடி, கொடி, பூக்கள், பறவைகள் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**வழிபாடு**

இந்தியாவில் பல்வேறு பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் இயற்கை வழிபாட்டை முதன்மையாகக் கொண்டவர்களாவர். இயற்கையும் அதனோடு தொடர்புடைய உயிரினங்களையும் தெய்வமாக வழிபடும் முறையை இன்றும் பழங்குடியின மக்களிடம் பாரம்பரிய முறையில் மரபு மாறாமல் காணலாம்.

சிந்தூர் பழங்குடி மக்கள் இயற்கையையும் இயற்கையோடு சேர்ந்த புலியைத் தேவதையாக வழிபட்டு வந்தனர். இதனை, "ராதாவின் வேண்டுகோளுக்கேற்ப அந்த 'ஆஞ்சல்' கிராமத்தில்

கலைநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். புலியைத் தேவதையாக எண்ணி வழிபடுவது அவர்கள் வழக்கம். ஒரு காலத்தில் அங்கிருந்த காடுகளில் புலி நடமாட்டம் இருந்திருக்க வேண்டும். அதன் பயத்தில்தான் இப்படி புலியைத் துதிக்க ஆரம்பித்திருக்க வேண்டும் என்று ராதாவிற்குப் பட்டது."(மேலது,ப.65) இம்மக்கள் புலியைத் தெய்வமாக வழிபட்டதை மேற்கண்ட வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

**பாரம்பரியத் தொழில்**

மனிதர்கள் ஆற்றங்கரையில் நிலையாக வாழத் தொடங்கிய நாள் முதல் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தொழில்களை மேற்கொண்டனர். அவ்வகையில் இப்பழங்குடியின மக்கள் வேளாண்மை தொழிலை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்தனர். இதனை, "பழங்குடியினர் பாரம்பரியமாகவே வேளாண்மை தொழில் செய்து வந்தனர். 'இன்னாருக்கு இன்ன நிலம்' என்று எந்தப் பத்திரமும் கிடையாது. காலங்காலமாய் - பரம்பரை பரம்பரையாய் உழுது வருகின்ற நிலத்தில் அந்தந்தக் குடும்பம் விவசாயம் செய்து கொள்ளும். இதில் அவர்களுக்குள் எந்தப் பிரச்சினையும் வந்தது கிடையாது" (மேலது,ப.3) என்னும் வரிகள் மெய்ப்பிக்கின்றன.தங்களுக்குள் எந்த வேறுபாடும் இல்லாமல் வேளாண்மை செய்தனர் என்பதை அறிய முடிகிறது. "இந்த நதி குன்றுகள் விதையைத் தூவினால் போதும் விளைவித்துத் தருகிறேன் எனும்படியான செழுமையான பூமி" (மேலது, , ப.2)என்னும் வரிகள் மேற்சான்றிற்கு வலுவூட்டுவதாக அமைகிறது. இவர்கள் உற்பத்தி செய்த விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்பது பழங்குடி மக்களின் மிகப்பெரிய குறைபாடாகும். இன்றளவும் விவசாயிகள் சந்திக்கும் மிகப்பெரிய சவாலும் அதுவே ஆகும்.

**பருவ மாற்றங்களைக் கணித்தல்**

பழங்காலம் தொட்டே மனிதர்கள் நிலவியல், சூழலியல் அறிவோடு வாழ்ந்து பருவமாற்றங்களைக் கணிக்கும் அறிவைப் பெற்றிருந்தனர் என்பதை பழங்குடியினரின் பழமொழிகள் மற்றும் விடுகதைகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப வேளாண்மை செய்வதன் மூலம் பருவநிலை மாற்றங்களை அறிந்துகொள்ளும் அறிவை பெற்றிருந்தனர்.

இப்பழங்குடியின மக்கள் பல்வேறு உயிரினங்களில் ஏற்படும் மாற்றத்தினையும் அறிந்திருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. "ஆமாம் தம்பி, நாங்க இங்க இருக்கற ஆறு, காடு, பறவை, தண்ணீ, மீனு, ஆகாசம் எல்லாத்தோடையும் ஒண்ணாக் கலந்து வாழறவங்க. எங்களுக்குக் காலையில குயிலு கத்தற சத்தம் தான் கடிகாரம். எந்த மாற்றம் ஏற்பட்டாலும் எங்களால உடனடியா உணர முடியும். எப்படின்னு கேட்டா சொல்லத் தெரியாது" (மேலது, , ப. 178) என்ற கோர்ட்டின் மூலம் இயற்கை மற்றும் இயற்கையில் உள்ள உயிரினங்களின் மீதான நிலை மாற்றங்களை அறிந்து வைத்திருந்தனர் என்பது புலனாகிறது. "இப்பக் காத்துல இருக்கற ஈரப்பதத்தையும் வழக்கத்துக்கு மிஞ்சி இருக்கிற குளிர்ச்சியையும் பாத்தா மழை நெறயா வரும்னு

தோணுது" (மேலது,,ப.78) என்பதன் மூலம் மழை குறித்த பருவநிலையை அறிந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

இவ்வாறு பழங்குடியினர் வாழ்க்கை அனுபவத்தின் மூலம் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து தங்களின் வாழ்க்கையை அதற்கு ஏற்ப தகவமைத்திருந்தனர் என்பதைக் காண முடிகிறது.

**திருமணச் சடங்கு**

இந்தியாவில் பல்வேறு இனக்குழு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு இனக்குழு மக்களிடமும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன. பழங்குடி மக்கள் திருமண சடங்கு முறையில் தங்களுக்கு எனத் தனித்த சடங்கு முறைகளைக் கொண்டுள்ளனர். இன்று நவீனத்துவமான காலத்தில் பழங்குடி மக்களிடையே சில மாற்றங்கள் கொண்டிருந்தாலும் திருமணச் சடங்கு முறையில் இன்றும் சமுகப் பாரம்பரியத்தில் எளிமையாக எவ்வித மாற்றமுமின்றி நடைபெறுவதால் அம்மக்கள் பழமையான சமுக பழக்கவழக்கங்களைப் பாதுகாத்து வருகின்றனர் என்பது தெளிவாகிறது.

மணமகன் மணமகள் நிச்சயம் செய்யும் வழக்கத்தில் இம் மக்களிடையே சில பொருட்களைக் கொடுத்து உறுதி செய்யும் வழக்கம் இருந்து வந்துள்ளது. குறிப்பாக, "மணப்பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை வீட்டார் கணிசமான தொகையைக் கொடுத்துத்தான் திருமணம் நிச்சயமாகும்" (மேலது, , ப.37) மணமகன் வீட்டார் பெண்வீட்டாருக்கு வரதட்சனை கொடுத்துப் பெண் எடுக்கும் பழக்கம் இப்பழங்குடி மக்களிடம் இருப்பதை "பக்கத்து கிராமத்தில் தான் பெண் இருப்பது வெள்ளாடுகளையும் பத்து மூட்டை மக்காச்சோளத்தையும் கொடுத்துவிட்டு பெண் எடுத்துக் கொண்டான்" (மேலது, , ப.125) என்று நாவல் சான்றுரைக்கிறது. இவ்வாறு வரதட்சணை கொடுத்து பெண் எடுக்கும் பழக்கம் இம்மக்களிடம் பாரம்பரியமாக இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**கல்வி மீதான நம்பிக்கை**

பழங்குடியின மக்கள் 'கல்விதான் வாழ்க்கையை மாற்றும்' என்னும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்களுக்கான கல்வியைக் கற்றுக் கொடுப்பதில் அரசும் அரசின் ஆசிரியர்களின் அலட்சிய போக்கினால் இவர்களின் கல்வி கானல்நீராய் போனது.

இதனை, "பழங்குடியினருக்கான பள்ளிக்கூடங்கள் என்ற பெயரில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஆரம்பித்த ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் எப்பொழுதாவதுதான் பாடம் நடக்கும். அதுவும் நகரத்து வாத்தியார் வசதிக்கேற்ப. அப்படி வாசிப்பதும் தொடர்ந்து அப்பியாசம் பண்ணாததால் மறந்து போய்விடும். தன் பெயரை மட்டும் வெகு நேரத்திற்கு நினைவில் வைத்துச் சிற்பி, செதுக்குவது போல் எழுதுகோலைப் பிடித்து எழுதி முடிப்பதே உச்சகட்டக் கல்வியாய் இருந்தது" (மேலது, ப.3) இத்தகைய ஆதங்கத்தை கதாபாத்திரங்கள் வழியாக நாவலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக, அவர்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டும். சமூகப்

பொருளாதாரத்தில் பழங்குடி மக்களும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற ஆசிரியரின் எண்ணத்தை நாவலில் காணமுடிகிறது.

**தலைமைத்துவப் பண்பு**

தலைமையத்துவ பண்பு என்பது இனக்குழு வாழ்வின் முக்கிய கூறாகும். ஒரு குழுவை வழி நடத்தும் தலைமை பண்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். பல்வேறு இன குழுக்களாக வாழ முற்பட்ட மனித இனம் தங்களுக்கென ஒரு தலைவனைத் தெரிந்தெடுத்து அவனைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர். இப்பண்புகள் பறவை, விலங்கு மற்ற எல்லா உயிரினங்களிடமும் உயிரோட்டம் கொண்ட ஒன்றாக இருந்து வருவதை காணலாம்.

இப்பண்பு நாகரிக வளர்ச்சியில் மனிதர்களிடம் கேள்விக்குறியான போதிலும் இன்றும் பழங்குடியின மக்களிடம் வேரோடி தொடர்ந்து தழைத்துக் கொண்டே இருப்பதைக் காணமுடிகிறது. பழங்குடியினரின் தலைமை பண்பை நாவலாசிரியர் தன் படைப்புகளில் பதிவு செய்துள்ளார்.

இதனை களத்தில் இறங்கி செயல்பட்டு இடர்களை எதிர்கொண்டு இலக்கை அடையும் தலைமைப் பண்பு கொண்ட பாத்திரமாக சிமன் கதாபாத்திரம் எடுத்துரைக்கிறது. "சிமன் உன்னை மாதிரி விழிப்புணர்வு இருக்கற இளைஞர்கள் எண்ணிக்கை மட்டும் நம்ம நாட்டில் அதிகமாகிவிட்டா நம்மை யாராலயும் ஏமாத்த முடியாது" (மேலது, , ப.37) என்னும் கூற்று மூலம் அறிய முடிகிறது.

குறிப்பாக, "சிறந்த புதினத்தில் படைக்க பெரும் பாத்திரங்கள் நாம் வாழும் உலகில் நம்மைப் போல் தலைநிமிர்ந்து நடப்பவர்களாய் இருத்தல் வேண்டும். அவர்கள் ஒரு கற்பனை கதையில் தோன்றும் பாத்திரங்கள் என்பதை மறந்து நாம் அவர்களிடத்தில் அன்பு காட்டவும், வெறுப்பு காட்டவும் கூடியவர்களாய் இருத்தல் வேண்டும்" (பேராசிரியர். அ.ச.ஞானசம்பந்தன், 1999) என்பது இங்கு நினைவுகூறத்தக்கதாகும். சிமன் ஒரு சிறந்த பழங்குடியின போராட்டத் தலைவனாக உருவெடுத்து வளர்ந்து வந்தவன். அவனது கூற்றாக ஆசிரியர் கூறும்போது, "இவ்வளவு வளங்களையும் தண்ணியில மூழ்கிவிடக்கூடாது என்கிற அவரது வைராக்கியம் வைரம் பாய ஆரம்பித்தது லட்சக்கணக்கான வருடங்களாய் இயற்கை சல்லடை செய்து சேர் பிடித்த சொத்துக்களை கண நேரத்தில் தூக்கி எறிந்து விட தோன்றவில்லை" (ஆ.ஓ., ப.35) என்கிறார். இதன் மூலம் சிமனுடைய தலைமையத்துவ பண்பு அறிய வருகிறது. கோவிந்தபாயின் மகன் சிமன் பழங்குடியின மக்களில் பள்ளியில் படித்தவன். அணைக்கட்டும் திட்டத்திற்கு எதிர்ப்பு குரல் கொடுத்து கிராம மக்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்துபவன். நேர்மையாக நடந்து கொள்பவன்.

தன் காதல் நினைவுகளை நெஞ்சில் மறைந்துக் கொண்டு வெளியில் தெரியாமல் தன் இன மக்களுக்காகப் போராடும் தலைமை பண்பு கொண்ட பத்திரமாகவே படைத்துள்ளார். தன் மகன் பொதுநலத்திற்காக ஈடுபடுவதை பார்த்த கோவிந்தபாய் தன் மகனின் செயல் பற்றி கூறும்போது, "இப்படிப்பட்ட மகனைப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வளவு பெரிய புண்ணியம் நான்

பண்ணியிருக்கணும் ஊருக்காகத் தன்னையே தியாகம் செஞ்சிப்புட்டானே" (மேலது, ப.35) என்ற வரிகளின் மூலம் பெரும் மகிழ்ச்சி அடைவதை காண முடிகிறது. இதனை வள்ளுவரின்,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள் - 69)

என்னும் குறளுக்கு ஏற்ப கோவிந்தபாய் தலைமை பண்பு கொண்ட தன் மகனைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதை கதை ஆசிரியர் நேர்த்தியாகப் படைத்துள்ளார்.

**பழங்குடியின மக்களின் வாழ்க்கையும் போராட்டமும்**

மனித வாழ்க்கை போராட்டம் நிறைந்த வாழ்கையாகவே பன்னெடுங்காலமாக நிலவி வருவதைக் காணமுடிகிறது. மக்கள் தன் உரிமையைப் பெறவேண்டும் எனில் போராடியே பெறவேண்டும் என்ற எழுதாத நீதியாக மாறிவிட்டதை உலகில் இன்று காணமுடிகிறது. பழங்குடியின மக்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. அறிவியல், விஞ்ஞானம், பரபரப்பு நிறைந்த இச்சூழலில் இவர்களின் வாழ்கை எந்தவித உயிர் பாதுகாப்புச் சூழலும் இல்லாமல் வாழ வேண்டிய நிர்பந்தத்திற்கு உட்படுத்தப்பட்ட வாழ்கையே வாழவேண்டிய நிலையினை நாவல் சுட்டிக்காட்டுகிறது.

இதனை,"பழங்குடியினர் உரிமைகளைப் பறிக்காதீர்கள்." "எங்களை இடம்பெயர்க்காதீர்கள்." "நாங்கள் அணை கட்ட விடமாட்டோம்". "நதியின் ஓட்டத்தைத் தடுக்காதீர்கள்." "எங்கள் கிராமங்களை நீரில் மூழ்கடிக்காதீர்கள்" "சுற்றுப்புறச் சூழலைச் சேதப்படுத்தாதீர்கள்" கோஷங்களை விட்டு விட்டு எழுப்பிக் கொண்டேயிருந்தனர்." (ஆ.ஓ., ப.173) என்னும் கோரிக்கை வாசகங்கள் மூலம் அறிய முடிகிறது. குறிப்பாக, "கதாப்பாத்திரங்களுக்கும் கதைக்கும் குறிப்பிட்ட போக்குகள், நோக்கங்கள், லட்சியங்கள் உண்டு." (மா ராமலிங்கம், 1972) என்னும் கூற்றுக்கு ஏற்ப இந்நாவலில் வரும் கதாபாத்திரங்கள் படைக்கபட்டுள்ளதாகக் காணமுடிகிறது.

போராடினாலும் அரசும் அரசு அதிகாரிகளின் ஏளனப் போக்கினாலும் சிந்தூர் பழங்குடியின மக்கள் தங்கள் உரிமையைப் போராடி பெற முடியாத சூழலைக் காணமுடிகிறது. இதனை, "சிமன்! நம்முடைய எதிர்ப்பைப் பத்தி அரசாங்கம் கொஞ்சம் கூடக் கவலைப்படற மாதிரி தெரியலை. அடிக்கல் நாட்டு விழாவை ரத்து செஞ்சாங்களே தவிர அணை கட்றதை இல்ல" (ஆ.ஓ., ப65) என்னும் கூற்று சான்றுரைக்கிறது. இத்தகைய போராட்டங்கள் குறித்த நாவல்கள், "நடப்பியலாவது வாழ்க்கைச் செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் உள்ளபடியே விளக்க வேண்டும்" (டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி, 1993) என்று ஓவெல்ஸ் என்னும் அமெரிக்கத் திறனாய்வாளர் கூறுகிறார். சமுதாயத்தில் ஏற்படும் முக்கிய சிக்கல்களையும் அவற்றின் காரணத்தையும் சுட்டி அவற்றைப் பற்றிய உண்மை அறிவைப்யும் புகட்டி, மனிதனின் அச்சிக்கல்களை மக்கள் எதிர்கொள்ளும் வழிமுறைகளைச் சுட்டுவது சமூகவியலின் முக்கிய குறிக்கோளாக அமைந்துள்ளது.

ஒரு படைப்பாளி ஏதேனுமொரு கருத்தை உணர்த்துவதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டு தம் படைப்பினை உருவாக்கியவர் எனலாம். டாக்டர் மு.வ. வின் 'அகல் விளக்கு' என்னும்

புதினம் சமுதாயச் சிந்தனைகள் மிக்கதாக விளங்குகிறது. "வாழ்வுக்கான போராட்டம் என்பது அசாதரணமானது முரண்பாடுகளும் போராட்டங்களும் வாழ்வோடு இணைந்தவை." - (டாக்டர். இரா. மோகன், 1998) என்னும் கருத்துடன் ஆத்தங்கரை ஓரம் புதினத்தின் கதைகரு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

**பண்பாட்டு மாற்றத்தை விரும்பாத நிலை**

பழங்குடியினர் பண்பாடு ஓர் இனக்குழு பண்பாடாகும். இதன்படி இம்மக்களை வேற்று இடத்திற்கு மாற்றினால் இவர்கள் தங்கள் பண்பாட்டை இழந்து புதிய பண்பாட்டுச் சூழலை, பழக்க வழக்கத்தை ஏற்க முடியாது. இங்கேயே வாழ வேண்டும். பண்பாட்டை இழக்கமாட்டோம் என்பதை முக்கிய கோரிக்கையாக வைத்திருந்தனர். "ராதா! நான் சொல்வதைச் சரியான கோணத்தில் புரிந்து கொள். அணையே தேவையில்லை என்கிற வாதம் இப்பொழுது லாயக்கற்றது. அணை கட்டுவது உறுதியாகிவிட்டது என்கிற பட்சத்தில் அதனால் இடம்பெயர்கின்ற பழங்குடியினருக்குச் சரியான 'மறுவாழ்வுப் பணிகள்' என்கிற கோரிக்கையை முன்வைக்கலாம் நடக்க வேண்டும் என்றுதான் அபிப்பிராயப்படுகிறேன்" (ஆ.ஓ., ப.19) என்னும் கூற்று மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

மக்களுக்கு மாற்று இடம் கொடுப்பதை அரசு அதிகாரியான ராதாவின் கணவர் கூறுவதிலிருந்து அணை கட்டுவது என்பது உறுதியானதை உணர்ந்து கொள்ள முடிகிறது. "வழுக்கைத் தலையில் முடியை ஒட்ட வைச்ச மாதிரிதான். இந்தச் செயற்கை வளம்" (மேலது, ப.65) என்று இடமாற்றம் குறித்து தங்கள் வெறுமை உணர்வை வெளிப்படுத்துவதை காண முடிகிறது. "இனி நான் பழங்குடியினர் பகுதிக்கே சென்று தங்கி விடப் போகிறேன். இனி என் போராட்ட களம் அங்கேதான்" (மேலது, , ப.20) என்று ராதா கூறுவதன் மூலம் இம்மக்கள் வேற்று இடத்தை விரும்பாத நிலையினை நாவலாசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

ஆத்தங்கரை ஓரம் புதின ஆசிரியர் தனது வாழ்க்கையை ஒட்டிய படைப்பினைப் படைத்தவராக விளங்குகிறார். "குறிப்பிட்ட காலச் சமுதாயத்தின் சிக்கல்களும் தனிப்பட்ட மனித மனப் போராட்டங்களும் ஊடாடியே அதை சமூக நாவல் என்று நிரூபிக்க வேண்டும்," (நா. பார்த்தசாரதி,1969) என்பதற்கேற்ப ஆத்தங்கரை ஓரம் புதினம் சமூகத்தின் சிக்கல்களையும் மனித மனப் போராட்டங்களையும் தெளிவாக விளக்கிக்காட்டும் வகையில் படைக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதனின் வாழ்கை முழுமையையும் வெளிப்படுத்தும் இலக்கிய வகைகளில் புதினம் சிறப்பிடம் பெறுகிறது.

**முடிவுரை**

வெ. இறையன்பு எழுதிய 'ஆத்தங்கரை ஓரம்' நாவல் பழங்குடியின மக்களின் பண்பாட்டு அடையாளங்களையும் வாழ்வியல் போராட்டங்களையும் மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளது. இந்நாவல் வழியாகப் பழங்குடியின மக்கள் இயற்கையோடு இணைந்து வாழும் பண்பையும், அவர்களின் விருந்தோம்பல், மண் சார்ந்த பற்று, வழிபாட்டு முறைகள் ஆகிய பண்பாட்டுக்

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.12**

கூறுகளையும் ஆசிரியர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அணைக்கட்டுமானத்தால் இம்மக்கள் தங்கள் பூர்வீக நிலத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகும் சூழலும், அதற்கெதிராக அவர்கள் நடத்திய போராட்டங்களும் அரசின் அலட்சியப் போக்கால் பயனற்றுப் போன நிலையும் நாவலில் யதார்த்தமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சிமன், ராதா படேங்கர் போன்ற கதாபாத்திரங்கள் வழியே தலைமைத்துவப் பண்பும் இன உணர்வும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பழங்குடியின மக்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும்போது ஏற்படும் பண்பாட்டு மாற்றமும் இழப்பும் அவர்களது வாழ்க்கையை முழுமையாகப் பாதிக்கின்றன என்பதை இந்நாவல் தெளிவுபடுத்துகிறது. எனவே, பழங்குடியின மக்களின் பண்பாட்டையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாதது என்னும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாவலின் முதன்மை நோக்கமாக அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. வெ. இறையன்பு, *ஆத்தங்கரைஓரம்*, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட்., 41-சி, சிட்கோகண்டன்சஸ்எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600098, 2004.
2. பக்தவச்சலபாரதி, *பண்பாட்டுமானுடவியல்*, மணிவாசகர்பதிப்பகம், சென்னை, 1990.
3. சாமிநாதசர்மா, *அரசியல்அல்லதுநீதியைப்பற்றிஆராய்ச்சி*, ப. 111.
4. ஞானசம்பந்தர் அ. சா., *இலக்கியக்கலை*, சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம்லிமிடெட், சென்னை, விரிவாக்கப்பட்டமுதற்பதிப்பு, 1999.
5. இரா. ராமலிங்கம், *நாவல்இலக்கியம்*, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, முதல்பதிப்பு, 1972.
6. தா. ஏ. ஞானமூர்த்தி, *இலக்கியத்திறனாய்வியல்*, ஐந்திணைப்பதிப்பகம், புத்தகம்வெளியிடுவோர், விற்பனையாளர் ஏ. பி., 1108, தென்றல்குடியிருப்பு, மூன்றாவதுதெரு, மேற்குஅண்ணாநகர், சென்னை – 600040, 1993.
7. மோகன், இரா., *நாவல்வளர்ச்சி*, மாணிக்கவாசகர்பதிப்பகம், சென்னை.
8. நா. பார்த்தசாரதி, *சமூகநாவல்*, ஏழாம்பதிப்பு, ஜூலை 1993, தமிழ்ப்புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை – 600005.
9. *திருக்குறள்*, உரை: மு. வரதராசனார், தென்னிந்தியசைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம்லிமிடெட், தி. நகர், சென்னை – 600017.


## Reference


1. V. Iraiyanbu, AathangaraiOoram, New Century Book House (P) Ltd., 41-C, Sidco Industrial Estate, Ambattur, Chennai – 600098.
2. Kroeber, A. L., & Kluckhohn, C. (1952). *Culture: A Critical Review of Concepts and Definitions*. Cambridge, MA: Peabody Museum. Alfred Kroeber, Clyde Kluckhohn, *Culture: A Critical Review of Concepts and Definitions*, 1952.
3. Bhaktavatsala Bharathi, *Cultural Anthropology*, ManivasagarPathippagam, Chennai, 1990.
4. Saminatha Sarma, *A Study on Politics or Justice*, p. 111.

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.12**


5. Gnanasambandhar A. Sa., *The Art of Literature*, Saiva Siddhanta Noorpathippu Kazhagam Limited, Chennai, Expanded First Edition, 1999.
6. Ira. Ramalingam, *The Novel as Literature*, Tamil Puthagalayam, Chennai, First Edition, 1972.
7. Tha. E. Gnanamoorthy, *Literary Criticism*, AindhinaiPathippagam Publishers and Distributors, A.B, 1108, Thendral Kudiyiruppu, 3rd Street, West Anna Nagar, Chennai – 600040.
8. Mohan, Ira., *The Development of the Novel*, ManickavasagarPathippagam, Chennai.
9. Naa. Parthasarathy, *The Social Novel*, Seventh Edition, July 1993, Tamil Puthagalayam, Triplicane, Chennai – 600 005.
10. Thiruvalluvar, Thirukkural, Edited by Mu. Varadarasanar, South India Saiva Siddhanta Works Publishing Society Ltd., T. Nagar, Chennai – 600017,
11. Kroeber, A. L., & Kluckhohn, C. (1952). *Culture: A Critical Review of Concepts and Definitions*. Cambridge, MA: Peabody Museum.Alfred Kroeber, Clyde Kluckhohn, *Culture: A Critical Review of Concepts and Definitions*, 1952.